JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 11 | January 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



உலகத்தை நோக்கி ஓடாமல், தேவனை நோக்கி

## கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்!

உள்ளே...

06 விட்டுக்கொடுக்காதவர்!!

12 கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்..

20 Achievers

30 ஜெபிக்கலாம் வாங்க!!

# வாலிபர் உலகம்


## வாசகர்களின் கவனத்திற்கு...

**கீழே கொடுக்கப்பட்டுள்ள QR ஸ்கேன் பண்ணினால்...**

**ஒவ்வொரு மாதமும் பத்திரிக்கைபற்றிய கருத்துக்களை தெரியப்படுத்தலாம்.**

**நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள், உங்களுக்குப் பிடித்தமான கட்டுரைகள் அதன் மூலம் கற்றுக் கொண்டவைகள் தெரியப்படுத்தலாம்.**

**உங்கள் சந்தாவை புதுப்பிக்கலாம்.**



₹ 100 ஆண்டு சந்தா

₹ 1000 ஆயுள் சந்தா

2023ஆம் ஆண்டுக்கு முன்பு சந்தா செலுத்தி. புதுப்பிக்காத வாசகர்களுக்கு. மார்ச் மாதத்திலிருந்து பத்திரிக்கை வராது.

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# 2026
# Happy New Year



**கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமான வாலிப மகனே, மகளே!**

கடந்த ஆண்டு முழுவதும் ஊழியம் செய்யக் கர்த்தர் நமக்குத் திறந்த வாசலைக் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம். தேசத்தின் பல இடங்களில் எழுப்புதல் அக்கினியை கொண்டு சென்ற வாலிபர்களாகிய உங்களுக்கும் வாலிபர் ஊழியத்தை பல வகைகளில் நேசித்து, ஆதரித்த தன்னார்வ நெஞ்சங்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் ஜெபக்குழு அங்கத்தினர்களுக்கும், வாலிபர் உலகம் சந்தாதாரர்களுக்கும், Igniters அனைவருக்கும் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் சார்பாக எங்களது

# இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

அன்புடன்
மோகன் சி. லாசரஸ்

# தலைவாசல்

*எனக்கு அன்பான வாலிப மகனே, மகளே!*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கடந்த ஆண்டு முழுவதும் கண்மணிபோல உங்களைக் காத்து, பெலப்படுத்தி வல்லமைப்படுத்தி கிருபையாய் பயன்படுத்திய தேவாதி தேவனை துதிக்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும், தேவன் அவருடைய வாக்குத்தத்தின்படி வாலிபர்களாகிய உங்களை வழிநடத்தி வருகிறார். இந்தக் கடைசிகால எழுப்புதல் சந்ததியாகிய நீங்கள் யாக்கோபைப் போலத் தேவனோடு போராடி, பல கிருபைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேவனுக்காக எதையும் சாதிக்கும் இருதயம் வேண்டும். தேவ கிருபையோடு வல்லமை, வரங்களையும் பெற்று ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை இருக்க வேண்டும். **மத்தேயு 7:7 சொல்வதுபோல: நாம் கேட்கும்போது நமக்குக் கிடைக்கிறது. நாம் தேடும்போது கண்டடைகிறோம். நாம் தட்டும்போது திறக்கப்படுகிறது.**



## நாம் எதைக் கேட்க வேண்டும்?

எலிசா, ஆவியின் வரம் இரட்டிப்பாய் வேண்டும் என்று அரிதானதைக் கேட்டார். எலியாவிற்குள் இருக்கும் ஆவியின் வரத்தை ஊடுருவிப் பார்க்கும் அளவிற்கு கூர்மையான ஆவிக்குரிய கண்கள் எலிசாவிற்கு இருந்தது.



## நாம் எதைத் தேட வேண்டும்?

மேலானதைத் தேட வேண்டும். உலகத்தின் மாயையையும் சிற்றின்பத்தையும் தேடி சாத்தான் விரிக்கும் வலையில் சிக்கிவிடாமல், மோசே எப்படி அநித்தியமான பாவ சந்தோஷத்தைத் தேடி போகாமல் தேவனுடைய சித்தம் செய்யும்படி தன் ஜனத்தையும், தன் தேவனையும் தேடி சென்றாரோ அதுபோல ராஜ்ஜியத்திற்கடுத்த காரியங்களைச் சிந்திக்க வேண்டும்.



## நாம் எதைத் தட்ட வேண்டும்?

நமக்கு முன் மூடப்பட்டிருக்கும் எல்லா சுவிசேஷ வாசல்களும் திறக்கப்பட விசுவாசத்தோடு தட்ட வேண்டும். எரிகோவின் வாசல்கள் பூட்டப்பட்டிருந்த போதும், விசுவாச வீரனாகிய யோசுவாவின் விசுவாச வரம் அவன் முன்னேறிச்செல்ல பெலன் தந்தது. சமஸ்த இஸ்ரவேல் சபையையும் செயல்பட வைத்து எரிகோ கோட்டை கைப்பற்றப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

எனக்கன்பான வாலிப மகனே(ளே), நீ கேட்டால், தேவன் உனக்குத் தேசத்தையே கொடுப்பார். நீ யோசுவாவின் சந்ததி. அனைத்து எல்லைகளையும் சுதந்தரிக்கும் இருதயம் உனக்கு இருக்க வேண்டும். பள்ளி, கல்லூரி துவங்கி பல்கலைக்கழகம்வரை இயேசுவின் அன்பை அறிவிக்க ஆசையாய் புறப்படு...

**உனக்காகத் தேவன் வரங்களைத் தருவார்.**
**உனக்காகத் தேவன் வாசல்களைத் திறப்பார்.**
**நீ தேடினால் புதிய வழிகளைக் கண்டடைவாய்!!**

*கிறிஸ்துவின் பணியில்*
**மோகன் சி. லாசரஸ்**

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார் ஊழிய தரிசனம்!



JESUS REDEEMS MINISTRIES

**50 கோடி** சுவிசேஷம்

**5 கோடி** ஆதாயம்

VISION 2030

2021-2030க்குள் (10 வருடங்களில்) 50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 5 கோடி ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்தி பரலோக இராஜ்யத்தில் சேர்க்க வேண்டும் என்பதே இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் பிரதான தரிசனம்.



# வாலிபர் ஊழிய தரிசனம்!

10 ஆண்டுகளில் 8 கோடி வாலிபர்களுக்குச் சுவிசேஷம் அறிவித்து 80 லட்சம் வாலிபர்களைக் கர்த்தருக்கென்று வைராக்கியமான சேனையாக எழுப்ப வேண்டும் என்ற அந்த உன்னத தரிசனத்தின் படி வாலிபர் ஊழியம் கடந்த வருடம் (2025 Jan -Nov.) பலவிதமான ஊழியங்களை செய்து 37,46,230 வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், 1,59,950 பேரை இரட்சிப்புக்குள் நடத்தவும் தேவன் கிருபை செய்தார்.







சாட்சி தொகுப்பு: காட்வின்

# விட்டுக்கொடுக்காதவர்!!

இவ்வுலகில் பிரபலமாக வேண்டும் என அநேக ஊழியர்கள் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கையில், தேவ பிரசன்னம் நம்மில் நிறைவாகிட பிரயாசப்படும் ஊழியர்கள் ஒரு சிலரையே நாம் காண முடிகிறது. அப்படி தனது பாடல்களின் மூலம் தேவ பிரசன்னத்தோடு, ஊழியம் செய்யும் ஒரு ஊழியரின் வாழ்க்கை சாட்சியைத் தான் இன்று பார்க்கப்போகிறோம். அப்படி தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட பாடல்களை மக்களிடம் சேர்க்கும் ஊழியம் மாத்திரமல்லாது சபை மேய்ப்பனாகவும் ஊழியம் செய்துவரும் போதகர் டேவிட் சாம் ஜாய்சன் அவர்களின் அனுபவ சாட்சியை அவரே சொல்ல நாம் கேட்கலாமா...!

## உங்களது சிறுபிராயம் மற்றும் குடும்பம்பற்றிச் சொல்லுங்களேன்?

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயில் பகுதியில், அப்பா பாஸ்டர் ஜாய்சன், அம்மா திருமதி லிசி பாய் தம்பதியருக்கு 5வது மகனாகப் பிறந்தேன். எனக்கு 3 அண்ணன் ஒரு அக்கா இருக்கிறார்கள். என்னுடைய 2வது அண்ணண் ஜாண்சாம் ஜாய்சன். நான் பிறக்கும் முன்பாகவே அம்மாவிடம், ஒரு தூதன் வந்து, ''டேவிட் பிறக்கப் போகிறான்'' என்று பேசி, தேவனின் வாக்குத்தத்தத்தின் படி பிறந்தேன். பாஸ்டர் குடும்பம் என்பதினால், சிறு வயதிலேயே ஆவிக்குரிய விஷயத்தில் வளர்க்கப்பட்டேன். எனது 4வது வயதிலேயே தபேலா வாசிக்க ஆரம்பித்தேன். சின்ன வயதிலேயே எனக்குத் தபேலா வாங்கி கொடுத்து ஆலயத்தில் வாசிக்க வைப்பார்கள். 10ஆம் வகுப்புவரைக்கும் உலகப்பிரகாரமான காரியங்களிலும் சரி, ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சரி மிகவும் நன்றாக வளர்க்கப்பட்டோம்.

## பாஸ்டர் குடும்பம் என்றாலே பயபக்தியில் தான் இருந்திருப்பீர்கள்... உங்களுடைய இளம் வயது வாழ்க்கை எப்படி இருந்தது?

10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது, என் நண்பர்கள் எல்லோரும் ஞானஸ்நானம் எடுக்கிறார்களே, பாஸ்டர் பையன் நான் எடுக்கவில்லை என்றால் ஏதாவது சொல்லுவார்கள் என்று, நண்பர்களோடு இணைந்து ஞானஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுத்தேன். அப்பொழுது நான் முழுமையான இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வரவில்லை. ஞானஸ்நானம் எடுத்தபிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பின்மாற்றத்திற்கு செல்ல ஆரம்பித்தேன். என் படிப்பிலும் கவனம் செலுத்தி படிக்க முடியவில்லை. நண்பர்களுடன் சேர்ந்து நல்ல சாப்பாடு வாங்கிக் கொடுக்க நிறைய பணம் செலவழிப்பேனே தவிர, வேறு எந்தக் கெட்டபழக்கமும் இல்லை. ஆலயத்தில் செய்ய வேண்டிய எல்லா





வேலைகளையும் சரியாகச் செய்வேன். ஆனால் ஆண்டவருக்கு எனக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. 12ஆம் வகுப்பு படிக்கும்போது மிகவும் பின்மாற்றத்திற்குள் சென்றேன். 12ஆம் வகுப்புத் தேர்வில் மிகவும் குறைந்த மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றேன். அது நான் படித்து வாங்கின மார்க் அல்ல, என்னுடைய பெற்றோரின் ஜெபம் என்று தான் சொல்லுவேன். 11ஆம் வகுப்பிலிருந்து english medium எடுத்துப் படித்ததால், பாடங்கள் மிகவும் கடினமாக இருந்தது. எங்கள் வீட்டில் எல்லோரும் Engineering படித்ததால், நானும் Engineering எடுத்துப் படித்தேன். என்னுடைய மார்க்கிற்கு எப்படியோ ஒரு காலேஜில் இடம் கிடைத்து BE படித்தேன்.

### கல்லூரிக்கு சென்ற நீங்கள் எப்படி இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டீர்கள்?

3rd year வரைக்கும் என்னுடைய வாழ்க்கை மிகவும் பின்மாற்றத்திற்குள் தான் இருந்தது. 3rd yearல் ஒருநாள் எனது நண்பன் என்னை அழைத்து, ''டேவிட், நீ எந்தப் பாதையில் சென்றுக் கொண்டிருக்கிறாய்? நீ யாருடைய மகன் என்று உனக்குத் தெரியுமா? ஆண்டவர் உன்னுடைய வாழ்க்கையைக் குறித்து என்ன நினைத்திருக்கிறார் தெரியுமா?'' என்று நிறைய காரியங்களை என்னோடு பேசினான். அதற்கு முன்பும் நிறைய advice பண்ணி இருக்கிறான். அப்பொழுதெல்லாம் என் கண்ணில் ஒரு சொட்டு கண்ணீர் வராது. ஆனால் அன்றைக்கு அவன் பேசும்போது என் உள்ளம் உடைந்து, கண்ணீர் வடிந்து கொண்டே இருக்கிறது. பேசி முடித்துவிட்டு, ''டேவிட் உன் வாழ்க்கையைப் பார்த்துக்கொள், ஆண்டவர் உன்னை நேசிக்கிறார்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான். என்னால் அழுகையை கட்டுப்படுத்த முடியாமல், என் அறையில் போய் என்னை மன்னியும் ஆண்டவரே என்று கதறி அழுது என்னை ஒப்புக்கொடுத்த அன்றைய தினம் தான் நான் இரட்சிக்கப்பட்ட நாள். என் பெற்றோரிடம் சென்று மன்னிப்புக் கேட்டேன். 5 செமஸ்டரில் வெற்றிபெறாத நான், தேவனுக்கு என்னை ஒப்புக்கொடுத்த பின்பு எல்லா பாடங்களிலும் வெற்றிபெற்றேன். அதன்பிறகு என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கை மாற ஆரம்பித்தது. கடைசி வருடம் படிப்பை முடிப்பதற்கு முன்பு ஆண்டவர் என்னை ஊழியத்திற்கு அழைத்தார்.



### சூப்பர்... ஊழிய அழைப்பைப் பெற்றவுடன் ஊழியத்திற்கு வந்தீர்களா?

இல்லை... வேலை செய்ய வேண்டும் என்பது தான் எனது விருப்பம். அந்த சூழ்நிலையில் ஒருநாள் அப்பாவுடன் கேரளாவிற்கு போய்க் கொண்டிருக்கும் போது, ''நான் உன்னை தெரிந்து கொண்டேன், நான் உன்னில் மகிமைப்படுவேன்'' என்று ஆண்டவர் என்னோடு பேசினார். கேரளாவிலிருந்து திரும்பி வரும்போது, ஆண்டவரிடம் ஒரு அடையாளம் கேட்டேன், நான் interview atten பண்ணி வேலைக்கான appointment order வந்த பிறகு ஊழியத்தை செய்ய வேண்டும் என்று நான் ஜெபித்தேன். அதுபோல் 60 பேர் கலந்து கொண்ட interviewவில் 5 பேருக்கு தான் அந்த வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். 4 round முடித்து கடைசி round போகும்போது, ரொம்ப கஷ்டமாக கேள்வி கேட்கிறார்கள் என்று என் நண்பன் சொன்னான். ஆனாலும் என்னைவிட திறமை சாலிகள், ஆங்கிலம் நன்றாக பேசுகிறவர்களை விட்டு, எனக்கு பெங்களூரில் வேலைக்கு appoint-

ment order கொடுத்தார்கள். அந்த லெட்டர் என் கையில் வந்தவுடன், ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்து, 3 வருடம் bible college படித்தேன்.

**சூப்பர்... ஆண்டவர் பணியை செய்ய ஒப்புக்கொடுத்தீர்கள்... உங்களுடைய ஊழியம் பற்றிச் சொல்லுங்களேன்?**

ஆரம்பநாட்களில் அப்பாவுடன் ஊழியத்திற்கு செல்வேன். அப்பொழுது சில இடங்களில் பாடல்



பாடுவேன். அதற்குப் பிறகு அண்ணனுடன் இணைந்துசெய்து வந்தேன். லாக் டவுன் நாட்களில் தான் ஆண்டவர் அதிகமாகப் பயன்படுத்த ஆரம்பித்தார். பெரிய ஊழியர்களோடு இணைந்து ஊழியம் செய்யத் தேவன் கிருபை செய்தார். இப்பொழுது FULL GOSPEL PENTECOSTAL CHURCHல் போதகராக இருக்கிறேன். 2016ஆம் ஆண்டில் என்னை விட்டுக்கொடுக்காதவர் பாடலைக் கொடுத்தார். அப்படியே தொடர்ந்து **என்னால் ஒன்றும் கூடாது என்று என்னை நான் தந்து விட்டேன், அற்புதம் செய்யுங்கப்பா எங்கள் வாழ்க்கையில்** இப்படி அநேக பாடல்களைக் கொடுத்து அதன் மூலம் அநேக சாட்சிகளைக் கேட்க கேட்க எனக்குள் இன்னும் பெலன் உண்டானது. தேவ நாமம் மகிமைப்பட்டது.

**உங்களுடைய திருமண வாழ்க்கைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

2016ஆம் ஆண்டு எனக்கும் ஆலீஸ்க்கும் திருமணம் முடிந்தது. ஒரு வருடம் முடியும் வரை நாங்கள் குழந்தைபற்றி யோசிக்கவில்லை. ஒரு வருடத்திற்கு பின்பு சிலர் சொன்ன வார்த்தைகள் மிகவும் எங்களை வேதனைப்படுத்தியது. என்னைவிட என் மனைவி மிகவும் பாதிக்கப்பட்டார்கள். என்னுடைய body condition என் மனைவியின் body condition பற்றி எங்களுக்குத் தெரியும். ஆனால் ஆண்டவர் உன் சந்ததியை ஆசீர்வதிப்பேன் என்று கொடுத்த வாக்குத்தத்தம் என்னைப் பெலப்படுத்தியது.

என் மனைவி நம்பிக்கையோடு ஜெபித்தாள். 2022ஆம் வருடம் ஜூலை மாதம் எங்களுக்கு ஐசக் சாம் ஜாய்சன் என்ற ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். அவர் சொன்னதை நிறைவேற்றினார். இப்பொழுது எங்களுக்கு 2 ஆண் பிள்ளைகளும் 1 பெண் பிள்ளையும் இருக்கிறார்கள். ஆண்டவர் சொன்னது போலவே சந்ததியை ஆசீர்வதித்து எங்களைக் குடும்பமாக பயன்படுத்தி வருகிறார்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

**ஆண்டவரோடு அதிக நேரம் செலவிட வாலிப பருவம் மிக முக்கியமானது. எனவே வாலிபர்களாகிய நீங்கள் உங்களை ஆண்டவருக்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கும்போது அதிகமாகப் பயன்படுத்துவார். ஆண்டவருக்கு பிரியம் இல்லாமல் வாழ்ந்த என்னை ஆண்டவர் யார் கையிலும் விட்டுக் கொடுக்காமல் அவருக்கு வேண்டும் என்று அழைத்து உருவாக்கி இன்றைக்கு பயன்படுத்த முடியுமானால், நீங்கள் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும், எவ்வளவு தூரம் அவரை விட்டுச் சென்றிருந்தாலும் ஆண்டவர் உங்களை மன்னித்து ஏற்றுக் கொண்டு பயன்படுத்துவார்.**






# பத்திரிக்கை ஊழியம்

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் **வாலிபர் உலகம்** மாதாந்திர பத்திரிக்கை தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மற்றும் மலையாளம் மொழிகளில் சுமார் 19,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வாலிபர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

தெலுங்கு, கன்னடம் மொழிகளில் வெப்சைட்டில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் 1000க்கும் மேற்பட்டோர் பதிவிறக்கம் செய்து படித்துப் பயன்பெற்று வருகிறார்கள்.

கடந்த 2025ம் வருடத்திலிருந்து பெங்காலி மொழியிலும் வெப்சைட்டில் பதிவேற்றம் செய்யத் தேவன் கிருபை செய்து வருகிறார்.

**இந்த ஆண்டில் இன்னும் 2 மொழிகளில் மொழிபெயர்க்கத் திட்டமிட்டு ஜெபித்து வருகிறோம்.**









# வாலிபர் எழுப்புதல் கூடுகை

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலம் 8 கோடி வாலிபர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்க, வாலிபர்கள் எழும்ப வேண்டும் என்ற தரிசனத்தோடு, தாலூக்காக்கள், கிராமங்கள், மாவட்டங்கள் தோறும் வாலிபர்களை அழைத்துத் தரிசனத்தைப் பகிர்ந்து, ஊழியம் செய்ய உற்சாகப்படுத்தி கடந்த வருடம் மட்டும் சுமார் 6339 வாலிபர்களை ஆயத்தப்படுத்தவும், கைப்பிரதிகள் மூலம் சுவிசேஷம் அறிவிக்க உற்சாகப்படுத்தவும் தேவன் கிருபை செய்தார்.

YOUTH REVIVAL MEET



# ஜெபம்





"இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக 8 கோடி வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 80 இலட்சம் வாலிபர்களை ஆதாயப்படுத்த, 80 இலட்சம் மணி நேரம் ஜெபிக்க வேண்டும் என்ற தரிசன திட்டத்தின் அடிப்படையில் Igniters Fellowship, Warfare prayer, All Night Prayer, Google meet prayer, Conference call prayer போன்ற பலவித ஜெபங்கள் மூலம் கடந்த 2025ம் வருடம் மட்டும் **5,79,096** மணி நேரங்கள் ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். அதோடு எழுப்புதல் தரிசனத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தரிசனத்தோடு எழுப்புதலுக்காகவும் ஜெபிக்க தேவன் வழிநடத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை!"



# கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்..

வாக்குத்தத்த செய்தி:
மோகன் சி. லாசரஸ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒவ்வொரு வருடமும் நமக்குக் கொடுக்கிற வாக்குத்தத்தத்தை வைத்து நாம் ஜெபிக்கும்போது, அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்க்கையில் அருளிச் செய்வதில், அவர் என்றென்றும் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்!

2025ம் வருடத்தில், "கலங்காதே! 'நான் (கர்த்தர்)... உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்" (யாத். 20:24) என்று வாக்குக் கொடுத்தபடியே, அனேகரை பிரத்தியட்சமாக வந்து சந்தித்து, அற்புதங்களைச் செய்த சாட்சிகளை அறிந்து, நான் கர்த்தரை துதிக்கிறேன்!

**2026ம் வருடத்தின் வாக்குத்தத்தத்திற்காக நான் தேவ சமூகத்தில் உபவாசத்தோடு காத்திருந்தபோது, நீ என்னிடத்தில் கேட்டால், அதை நான் உனக்குக் கொடுப்பேன்! நீ என்னைத் தாகத்தோடு தேடினால், நான் உனக்கு வெளிப்படுவேன்! நீ என் இதயக் கதவைத் தட்டினால், அது உனக்குத் திறக்கப்படும்! (மத்தேயு 7:7) என்று வாக்குக் கொடுத்தார். கர்த்தர் இந்த வருடத்திற்கென்று கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தில் உள்ள, 3 காரியங்களைக் குறித்து நாம் தியானிப்போம்.**

## கேளுங்கள், கொடுக்கப்படும்!

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத்தேயு 7:7). என்னிடத்தில் ஜெபிக்க வருகிற சிலரிடத்தில், "என்ன காரியத்திற்காக நான் ஜெபிக்க வேண்டும்?" என்று கேட்கும்போது, ஒருசிலர் வாய் திறந்து பேசமாட்டார்கள். வாய் திறந்து பேசாத பட்சத்தில், அவர்களுக்கு என்ன தேவையென்று எப்படி அறிந்து ஜெபிக்க முடியும்? இன்னும் சிலர், கர்த்தருக்கு எல்லாமே தெரியும் என்று சொல்வார்கள். உனக்கு என்ன தேவையென்று தேவனுக்கு நன்றாகவே தெரியும்! ஆனால், நீ என்னிடத்தில் கேட்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

இயேசு கிறிஸ்து ஜனங்களுக்கு நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த நாட்களில், 'பர்திமேயு' என்கிற கண் பார்வை தெரியாத ஒரு மனிதன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். இயேசு வருவதை அவன் கேள்விப்பட்டு, "இயேசுவே, தாவீதின் குமாரனே" என்று, சத்தமாகக் கூப்பிட்டான். உடனே இயேசு "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டவுடன், "ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்" என்று சொன்னவுடன், ''அற்புதம் செய்து, தெளிவான கண் பார்வையைக் கொடுத்தார்'' (மாற்கு 10:46-52).



கர்த்தருக்கு எல்லாமே தெரியும்; ஆனால், நம்முடைய மன விருப்பத்தை அவரிடத்தில் சொல்ல வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். எனவேதான், “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்” என்று கர்த்தர் நம்மைப் பார்த்துச் சொல்கிறார்.

- கண் தெரியாத 2 மனிதர்கள் “தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்!” என்று கேட்டவுடன், தெளிவான கண் பார்வையைக் கொடுத்தார்! (மத்தேயு 9:27-30).
- தொழு நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் அற்புதமான சுகத்தை பெற்றுக் கொண்டான்! (மத்தேயு 8:2,3).
- தன் வேலைக்காரனுடைய வியாதியைச் சுகமாக்கினார்! (மத்தேயு 8:5-13).
- பிசாசின் பிடியினால் வேதனைப்பட்ட கானானிய ஸ்திரீயின் மகளுக்குப் பூரண விடுதலையைக் கொடுத்தார்! (மத்தேயு 15:22-28).
- பிசாசினால் பாதிக்கப்பட்டிருந்த மகனுக்குள் இருந்த பிசாசின் ஆவியைத் துரத்தி, விடுதலையை கொடுத்தார்! (மத்தேயு 17:14-18).

அதேபோல நீங்களும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி, விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேட்கும்போது, கட்டாயம் அவர் நமக்கு அற்புதங்களைச் செய்வார்.

இயேசுவை அறியாத, மிகுந்த பக்தியுள்ள ஒரு சகோதரர் சுமார் 15 வருடங்களாகியும் குழந்தை இல்லாமல், பல நிந்தையான வார்த்தைகளால் மனதளவில் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருந்தார். எவ்வளவோ பணம் செலவழித்தும் மருத்துவம் செய்து பார்த்தும், பல கடவுள்களை நம்பி ஆயிரக்கணக்கான பணம் செலவு செய்தும், பயன் இல்லாமல் மரித்து விடலாம் என்கிற மனநிலைமைக்கு வந்தபோது, இயேசுவை கேள்விப்பட்டு, ‘ஜெபிக்கலாம் வாங்க’ நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்க்க ஆரம்பித்தார்கள். ஒருநாள் நிகழ்ச்சியில், ‘கர்ப்பத்தின் கனி’ ஆசீர்வாதத்திற்காக ஜெபம் ஏறெடுக்கபட்டபோது, கணவனும், மனைவியுமாக மிகுந்த கண்ணீரோடு, “இயேசுவே, உமக்காக வளர்க்க எங்களுக்கொரு குழந்தையைத் தாரும்” என்று ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, குழந்தை செல்வத்தைக் கொடுத்து அவர்களை மகிழப் பண்ணினார்! அவர்களுடைய துக்கம், நிந்தை, அவமானம், ஏமாற்றம் நீங்கியது! ஒரு பெரிய மகிழ்ச்சி உண்டானது!

**அதே கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கும் அதிசயங்களைச் செய்யப் போகிறார்! இன்றைக்கு நீங்களும் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேளுங்கள். ஏனென்றால், “கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்” (மத்தேயு 7:8; லூக்கா 11:10) என்று இயேசு கிறிஸ்து சொல்லி இருக்கிறார்.**

## தேடுங்கள், கண்டடைவீர்கள்!

“தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்” (மத்தேயு 7:7).

“உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் (இயேசு கிறிஸ்து) சொல்லுகிறார்” எரேமியா 29:13,14.

2 நாளாகமம் 7:14ல், “என் முகத்தைத் தேடுங்கள்!” என்று கர்த்தர் சொல்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவை தேட வேண்டும். பொதுவாக நாம் அவரிடத்தில் ஆசீர்வாதங்களைத்தான் தேடுகிறோம். அவருடைய கைகளில் இருக்கிற நன்மைகளைப் பறித்துக் கொள்ளத்தான் நாம் விரும்புகிறோம். அதற்கும் மேலாக, அந்த ஆசீர்வாதங்களை எல்லாம் கொடுக்கிற கர்த்தரைத்தான் நாம் தேட வேண்டும்.



தானியேல், “நான் உபவாசம் பண்ணி, கர்த்தரை ஜெபத்தினாலும், விண்ணப்பங்களினாலும் தேடினேன்” என்று சொன்னார் (தானியேல் 9:3).

கர்த்தர் ஒரு மனிதனை சந்திப்பது உண்மை! அதிலும் முழு இருதயத்தோடு நாம் அவரைத் தேடினால், தன்னை அவர் நமக்கு வெளிப்படுத்துவதும் உண்மை! ஆனால், அதற்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். முழு இருதயத்தோடு, தாகத்தோடு, சுயநலமில்லாதபடி கர்த்தரை நாம் தேட வேண்டும். அப்போதுதான் கர்த்தர் தம்மை நமக்கு வெளிப்படுத்துவார்.

தமிழ்நாட்டில் உள்ள இராமநாதபுரத்தை சார்ந்த ஒரு வாலிபன் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், கடவுள் நம்பிக்கை இல்லாமல், கடவுள் மறுப்பு கொள்கையுடைய ஒரு இயக்கத்தில் போய்ச் சேர்ந்து கொண்டான். அவனுடைய வாழ்க்கை குடிப்பதிலும், புகை பிடிப்பதிலுமாகத்தான் இருந்தது. திடீரென்று ஒருநாள் இயேசு கிறிஸ்து அவனைச் சந்தித்து, தன்னை அவனுக்கு வெளிப்படுத்தினார்! அதன் நிமித்தமாக, அவனுக்குள் ஒரு பெரிய இரட்சிப்பின் சந்தோஷம் வந்து விட்டது! பாவப் பழக்கவழக்கத்திலிருந்து அவனுக்கு நிரந்தரமான ஒரு விடுதலை கிடைத்து விட்டது!



ஒருநாள் அந்த வாலிபன் தன்னுடைய வீட்டிலிருந்த ஒரு அறைக்குள் போய், கதவை மூடிக் கொண்டு, "எத்தனை நாட்களானாலும் பரவாயில்லை! நான் கர்த்தரை தரிசித்தே ஆக வேண்டும்!" என்கிற தணியாத தாகம் கொண்டவனாக, உபவாசத்தோடு மணிக்கணக்காக ஜெபித்து, முழு இருதயத்தோடு, மிகுந்த தாகத்தோடு கர்த்தரை தேட ஆரம்பித்தான்.

திடீரென்று அந்த அறைக்குள் பிரகாசமான ஒரு ஒளி, அந்த ஒளிக்கு மத்தியில், மின்னலை போன்ற ஒரு உருவம் நின்று கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் கூர்ந்து பார்த்தபோது, அதற்குள்ளிருந்து இயேசு கிறிஸ்து தரிசனமாகி, தன்னை அவனுக்கு வெளிப்படுத்தியது மாத்திரமல்ல, அவனை ஒரு தீர்க்கதரிசியாகவும் அபிஷேகம் பண்ணினார். அன்றைக்கு கர்த்தரை தரிசித்த அந்த வாலிபன்தான், இன்றைக்கு கர்த்தருடைய ஊழியத்தை வல்லமையாகச் செய்து கொண்டிருக்கிற நம்முடைய அன்பு சகோதரர், 'தீர்க்கதரிசி'– வின்சென்ட் செல்வக்குமார் அவர்கள்!

**நாமும் கர்த்தரை முழு இருதயத்தோடு தேடினால், அவரைக் கண்டுபிடிக்க முடியும். பிதாவாகிய தேவனை நமக்கு வெளிப்படுத்தத்தான், இயேசு கிறிஸ்து ஒரு மனிதனாக இந்தப் பூமிக்கு வந்தார்! எனவே, கர்த்தரை நம்மால் பார்க்க முடியும்! அவரை நம்மால் தரிசிக்க முடியும்! அவருடைய குரலை நம்மால் கேட்கவும் முடியும்!**

## தட்டுங்கள், திறக்கப்படும்!

"தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" மத்தேயு 7:7. கர்த்தர் இன்றைக்கு உங்களைப் பார்த்து, "என் மக(னே)ளே, நீ தட்டினால் உனக்குத் திறக்கப்படும்!" என்று சொல்கிறார்.

**இதைக் குறித்து இயேசு கிறிஸ்து சொன்ன ஒரு உவமையைப் பாருங்கள்:**

ஒரு மனிதன் நடு இரவு நேரத்தில் பக்கத்து வீட்டிலிருக்கிற தன் சிநேகிதனுடைய வீட்டுக் கதவைத் தட்டி அவனை எழுப்பி, "என் சிநேகிதன் ஒருவன் பசியோடு என் வீட்டிற்கு வந்திருக்கிறான். அவனுக்குக் கொடுக்க என் வீட்டில் சாப்பாடு இல்லை. ஆகவே, ஒரு 3 அப்பங்களை நீ எனக்குக் கடனாகக் கொடுத்தால், அதை அவனுக்குக் கொடுத்து, அவனுடைய பசியை ஆற்றுவேன்." என்று சொல்லிக் கேட்டான்.

அதற்கு அவன், “இந்த நடு இரவு நேரத்தில் என்னை எழுப்பித் தொந்தரவு செய்யாதே. நான் படுத்து விட்டேன். என் பிள்ளைகள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் என்னால் உனக்கு எதுவும் தர முடியாது” என்று சொன்னாலும், தன் சினேகிதன் தன்னை மிகவும் வருந்திக் கேட்டபடியினால், அவன் கேட்டதை அவனுக்குக் கொடுப்பான்” என்று இயேசு கிறிஸ்து சொன்ன ஒரு சம்பவம் பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது (லூக்கா 11:5-8).



அதேபோல, நீங்களும் தட்டினால் உங்களுக்குத் திறக்கப்படும்! உங்களுக்காக மட்டுமல்ல; உங்களுடைய சினேகிதர்களுக்காக, சொந்த பந்தங்களுக்காக, உங்கள் அருகாமையில் வசிக்கிற மற்ற மக்களுக்காக, உங்கள் கிராமத்தில் இருக்கிற மக்களுக்காக, உங்கள் பட்டணத்தில் இருக்கிற மக்களுக்காக, உங்கள் தேசத்தில் இருக்கிற மக்களுக்காக, கர்த்தருடைய இருதய கதவை நீங்கள் தட்ட வேண்டும். மற்றவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வது என்பது, கர்த்தருக்கு பிரியமான, எவ்வளவு பெரிய ஒரு பாக்கியமான காரியம் தெரியுமா?

“எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்... நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது” (1 தீமோ 2:1-3) என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. மற்றவர்களுடைய பாரத்தை நம்முடைய பாரமாக நாம் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்காகத் தேவ சமூகத்திலே நின்று பரலோகத்தின் கதவைத் தட்டினால், கட்டாயம் கர்த்தர் பதில் தருவார்!

**கர்த்தர் இன்றைக்கு உங்களுடைய வேண்டுதலுக்காகத்தான் காத்திருக்கிறார்.**

**நாமும் கர்த்தரை முழு இருதயத்தோடு தட்டினால், அடைபட்ட கதவுகள் திறக்கப்படும்! கர்த்தர் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தை தினமும் சொல்லி, ஸ்தோத்தரித்து ஜெபிக்கும்போது, தினந்தோறும் அற்புதங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




# எழுப்புதல் சேனை (Fire Team)

இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலமாக வாலிபர் எழுப்புதல் சேனையை எழுப்ப வேண்டும் என்று இயேசு சொன்ன திட்டத்தின்படி, கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் எழுப்புதல் சேனையில் 26 வாலிபர்கள் 3 1/2 வருடங்கள் பயிற்சி பெற்று இன்றைக்கு தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். சாதாரண வாலிபர்களைக் கொண்டு அசாதாரணமான காரியங்களைச் செய்வேன் என்று தேவன் வாக்கினால் சொன்னதை கரத்தினால் நிறைவேற்றி வருகிறார். தேவனுக்கே மகிமை!









# எழுப்புதல் மிஷனெரிகள்

## (Revival Missionaries)










தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களில் 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 38 எழுப்புதல் மிஷனெரிகள் கிராமங்கள் தோறும் சென்று சுவிசேஷ அறிவிப்பதோடு, ஆலயங்களில் எழுப்புதலின் செய்தியை அறிவித்து ஜெபித்து வருகிறார்கள். அவர்கள் மூலமாக அநேக உயிருள்ள சாட்சிகளைத் தேவன் எழும்பி வருகிறார். 2024ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ஜூன் வரை பயிற்றுவிக்கப்பட்டு, 2024 ஜூலை முதல் 2025 நவம்பர் வரை 7 மண்டலங்களில் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் உள்ள 180 கிராமங்களைச் சந்தித்து, 71,536 பேருக்குச் சுவிசேஷம் அறிவித்திருக்கிறார்கள். 71 சபைகளில் எழுப்புதலின் அவசியத்தை அறிவித்து, எழுப்புதலுக்கு நேராக வழிநடத்தினார்கள். இக்கூடுகைகளுக்காக 9599 மணி நேரங்கள் ஜெபித்திருக்கிறார்கள்.









# Revival IGNiTERS Monthly Fellowship

வாலிபர்களைக் கர்த்தருக்காக வைராக்கியமான சேனையாக எழுப்பவும், அவர்கள் எழும்பி ஊழியம் செய்ய வேண்டும் என்றும், ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டில் **36** இடங்களிலும், மகாராஷ்டிரா, ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் **5** இடங்களிலும், மொத்தம் **41** இடங்களில் '**Igniters** மாதாந்திர வாலிபர் கூடுகை' நடைபெற்று வருகிறது. இந்தக் கூடுகையில் கலந்து கொள்வதன் மூலம், **Igniters** ஒவ்வொரு மாதமும் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில் ஒரு புதுபெலன் பெற்று, தங்கள் கிராமங்களில் சென்று தீவிரமாய் சுவிசேஷம் அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் சுமார் **1600 Igniters** கூடி ஜெபித்து வருகிறார்கள். **2026**ஆம் ஆண்டில் தெலுங்கானா மற்றும் கேரளா மாநிலங்களில் இக்கூடுகையை ஆரம்பிக்கத் திட்டமிட்டு ஜெபித்து வருகிறோம்.














# Achievers

## தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை



தேர்வு எழுதும் மாணவர்களுக்கென்று ஒவ்வொரு வருடமும் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் Achievers கூடுகை நடைபெற்று வருகிறது. 2025ஆம் வருடமும் தமிழ்நாடு, மஹாராஷ்டிரா மற்றும் ஆந்திரா மாநிலங்களில் இக்கூடுகையை நடத்த தேவன் கிருபை செய்தார். தேர்வைக் குறித்த பயம் மற்றும் நம்பிக்கை இழந்த சூழ்நிலையில் இருந்த மாணவ மாணவியருக்கு படிப்பில் கவனம் செலுத்தி படிக்க ஆலோசனை, மருத்துவ டிப்ஸ் மற்றும் ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்தி, ஜெபித்து அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். கடந்த 2025ம் வருடம் 15 இடங்களில் நடைபெற்ற Achievers கூடுகை மூலமாகச் சுமார் 7487 மாணவ மாணவியர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தேவனுக்கே மகிமை!



# மவுண்ட் சீனாய்

(ஒருநாள் வாலிபர் உபவாசக் கூடுகை)

2025





கடைசிகால எழுப்புதலில் வாலிபர்கள் தேசத்திற்காக ஜெபிக்கிறவர்களாகவும், அழிந்துக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து எலியாவைப் போலக் கர்த்தரே தேவன் என்று நிரூபிக்கிற சேனைகளாகவும் எழும்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட ''மவுண்ட் சீனாய்'' (வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச ஜெபம்), கடந்த 15 ஆண்டுகளாகத் தீபாவளி தினத்தன்று பல இடங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த வருடமும் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி மற்றும் மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் என 33 இடங்களில் மவுண்ட் சீனாய் கூடுகையை நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் 6500 வாலிபர்கள் ஒருநாள் முழுவதும் உபவாசத்தோடு தேசத்திற்காகத் திறப்பிலே நின்று ஜெபிக்க கூடி வந்தார்கள். கர்த்தர் நாமம் மகிமைப்பட்டது!








[illegible] IGNITERS [illegible]

## EVERY 1ST SUNDAY (4TH JAN)

**MUMBAI – DHARAVI**
**(5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR**
**(4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

**SANKARANKOIL**
**(2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR**
**(3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND**
**(5PM - 7:30PM)**
Shekinah NLA Church,
Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI**
**(2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET**
**(3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 | 9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar,
1st street, Salem Road,
Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto,
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM**
**(3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service,
Gandhiji Road
9750722000

## EVERY 2ND SUNDAY (11TH JAN)

**BANGALORE**
**(3PM-5PM)**
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## EVERY 3RD SATURDAY (17TH JAN)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross,
St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3RD SUNDAY (18TH JAN)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI**
**(3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9750955548

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4TH SUNDAY (25TH JAN)

**THIRUVALLUR**
**(3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI**
**(2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop]
41, K.Salai pudur Byepass Road,
Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**







# பள்ளிக் – கல்லூரிக் கூடுகை





தென் மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சுமார் 79 பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் சென்று மாணவர்களுக்கு இயேசுவின் அன்பை அறிவிப்பதோடு, கல்வி கற்பதன் அவசியத்தையும் கூறி, படிப்பில் பின்தங்கிய மாணவ மாணவியரை ஊக்கப்படுத்தி அவர்களும் சாதனையாளர்களாக மாற ஆலோசனைகளையும் வழங்கி அவர்களுக்காக ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். இந்த வருடம் மட்டும் 21,677 மாணவ மாணவியருக்கு இயேசுவின் அன்பை அறிவிக்கத் தேவன் வழிவாசலை திறந்துக் கொடுத்தார்.












இயேசு விடுவிக்கிறார்
ஊழியங்கள் நடத்தும்

# Achievers 2026

## ஊட்டியில்...

**ஜனவரி 26** திங்கள் கிழமை

மதியம்: 1:00 - மாலை: 5:00

இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம்,
D.no. 206, Green field,Walsham Road,
Ooty, The Nilgiris.

தொடர்புக்கு: 9442348999 / 9488475315

செய்தியும், ஜெபமும்:
**சகோ. சதீஷ் குமார்**



## திருச்சியில்...

**பிப்ரவரி 7** சனிக்கிழமை

மதியம்: 3:00 - மாலை: 6:00

இடம்: YMCA ஹால், GH எதிரில்,
புத்தூர், திருச்சி.

தொடர்புக்கு: 9489775075

செய்தியும், ஜெபமும்:
**சகோ. அவினாஷ்**



## பெங்களூரில்...

# வாலிபர் கூடுகை - 2026



**மார்ச் 31** திங்கட்கிழமை

SCAN ME

காலை: 9 மணி முதல்
மதியம்: 3 மணிவரை

செய்தியும், ஜெபமும்:
சகோ. **மோகன் சி. லாசரஸ்,**
சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்**

முன்பதிவு செய்திருப்பவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவார்கள்.

தொடர்புக்கு: 99620 85523

# Youth FESTIVALS



எழுப்புதலை பிரகடனப்படுத்துவதற்காகக் கர்த்தருடைய ஊழியருக்குத் தேவன் கொடுத்த திட்டத்தின்படி கடந்த மே மாதம் 3ம் தேதி முதல் 10ம் தேதிவரை நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் வைத்து **50** பெருவிழாக்களை நடத்த தேவன் கிருபை செய்தார்.

இதில் வாலிபர்களுக்கெனப் பிரத்யேகமாக வாலிபர் பெருவிழா நடத்த தேவன் சித்தம்கொண்டு **7** நாட்களும் டேவிட் ஆடிட்டோரியத்தில் வைத்து ஒவ்வொரு தலைப்பில் கடைசி கால எழுப்புதலுக்கான செய்திகள் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் சுமார் **600** வாலிபர்கள் கலந்து கொண்டனர். **7** நாட்களும் கலந்து கொண்ட **4143** வாலிபர்களில் **242** வாலிபர்கள் புதிதாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். **240** பேரைப் புதிதாகத் தேவன் தமது ஆவியினாலே அபிஷேகம் பண்ணி அனுப்பினார். பலவிதமான பாவ கட்டுகளோடும் பிரச்சனைகளோடும் வந்த வாலிபர்களுக்காக ஆலோசனை கொடுத்து ஜெபித்ததில் **518** பேர் பூரண விடுதலை பெற்று கடந்து சென்றனர்.


அது மட்டுமல்லாமல் 6ஆம் தேதி மாலை **6:00** மணி முதல் **9** மணி வரைக்கும் தேவனுடைய கூடாரத்தில் வைத்து நடைபெற்ற சிறப்பு வாலிபர் பெருவிழாவில் சுமார் **6000** வாலிபர்கள் கலந்து கொண்டார்கள். அதில் சகோதரர் மோகன் சி லாசரஸ் அவர்கள் **யோசேப்பு கனி தரும் திராட்சை செடி** என்ற தலைப்பில் செய்தி அளித்து வாலிபர்களை எழுப்புதல் தரிசனத்தோடு இணைந்து ஓட ஊக்கப்படுத்தி ஜெபித்து அனுப்பினார்கள். தேவனுக்கே மகிமை!!

# வேதாகம புதையல் வேட்டை

## மறைந்திருக்கும் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களைக் கண்டுபிடித்து வட்டமிட்டு அனுப்பவும்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | இ | ய | ற | ட | த் | ந | உ | ஓ | வ | ழ | சி | ல் | பெ | ஊ |
| ஐ | ப் | ம் | டி | ஓ | இ | கீ | சி | ன் | வ | ல | ழ | ள | ன் | வ |
| ஆ | ஈ | த | யீ | எ | றி | ந் | ஜி | கு | மு | க் | வை | செ | ய | ல |
| வீ | சே | யி | லி | ரா | நீ | ர் | உ | கு | வ | ஜி | பு | ழ | மீ | ஆ |
| உ | ச | ர் | நீ | ட | பி | கு | ழ | ற | வீ | லோ | சா | ந | ன் | ரு |
| ப | ஸ் | ஏ | ஆ | ரு | ற | ப் | ஊ | ர் | ன் | ம | ஐ | ல | ளு | உ |
| சா | ளு | வ | ர் | ஐ | உ | ற | எ | ள | ப | நீ | ஜி | ன் | சீ | வீ |
| ல் | இ | கு | வ | ஊ | ட | யி | த் | மீ | ரு | ன் | சி | ற | ஸ் | ஏ |
| வீ | ழ | மீ | தா | சீ | ஜி | ஐ | வ | ஓ | யோ | வி | ர் | ஊ | ப | உ |
| ந | ளு | ண் | உ | மீ | கா | வீ | ர் | மி | ஜி | சா | நீ | ம | ழ | யி |
| கு | ச | ரு | நீ | ஐ | த் | ஏ | சி | ட | ஸ் | ரு | சீ | யி | சா | இ |
| உ | ளு | ப | ற | ஜி | ஊ | யூ | தா | யி | வீ | ன் | வ | ஊ | ஏ | ச |
| ன் | மீ | ல் | நீ | ஐ | உ | ரு | ஓ | ச | வி | ஜி | இ | ஸ் | மீ | க் |
| நீ | ற | கு | சீ | மீ | ர் | ரு | ப | ஆ | சா | உ | ஐ | வ | ளு | கா |
| ர் | ம | ழ | வ | சே | ணா | ம | உ | ல் | ஜி | ட | நீ | கு | ப | ர் |

**கடந்த மாத வெற்றியாளர்**
சகோ. சாமுவேல், நடைக்காவு
அவர்களை வாழ்த்துகிறோம்.




பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **15.01.2026**

### கடந்த மாத விடைகள்

1. பெத்லகேம்
2. மரியாள்
3. சாஸ்திரிகள்
4. காபிரியேல்
5. முன்னணையில்
6. ஒன்றுமில்லை
7. ஏரோது
8. இரட்சகர்
9. தேவன் நம்மோடிருக்கிறார்
10. ஏசாயா

சரியான விடைஅனுப்பும் ஒரு நபருக்கு பரிசு உண்டு

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

# தொலைக்காட்சி ஊழியம்





இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாகப் பாடல் ஆராதனை, சாட்சிகள், குறும்படங்கள், கனவுப்பாதை, உண்மையைத் தெரிஞ்சுக்கோ, சகோ.மோகன் சி லாசரஸ் அவர்களின் சிறப்பு தேவசெய்தி போன்ற வாலிபர்களுக்கான பல பிரத்யேகமான நிகழ்ச்சிகள் வாரந்தோறும் இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தங்கள் மற்றும் சத்தியம் டிவி வாயிலாக ஒளிபரப்பப்பட்டு வருகிறது. (சத்தியம் TVயில் சனிக்கிழமை தோறும் காலை 6.30 மணிக்கும், இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தளங்களில் 7 மணிக்கும் ஒளிபரப்பப்படுகிறது). கடந்த வருடம் ''ஆராதனையும் அனுபவமும், வாதம் விவாதம் Talk Show, எழுப்புதல் சுவடுகள்'' போன்ற சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள், வாலிபர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கும் வகையிலும் எழுப்புதலை பரவச்செய்யும் வகையிலும் புதிதாக ஒளிபரப்பு செய்யப்பட்டன. கடந்த 2025ம் வருடம் மட்டும் 14,85,802 பேர் இந்நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமை ''Revival Igniters'' நிகழ்ச்சி நேரலையாக ஒளிபரப்பப்படுவதில் சுமார் 10,000 வாலிபர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். 5வது ஞாயிற்றுக் கிழமை கன்னடா மற்றும் ஹிந்தி மொழிகளிலும் இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



# ஜெபிக்கலாம் வாங்க!!

## ஜனவரி 2026

ஜெபம்: பெனிட்டா



பீஹார் முதலமைச்சராக 10வது முறையாகப் பதவியேற்ற திரு. நிதிஷ்குமார் மற்றும் 26 அமைச்சர்களுக்காகவும், தேவ பாதுகாப்பு உண்டாகவும், நல்லாட்சி அமைந்திடவும் ஜெபிப்போம்.



போரை நிறுத்தும் அளவுக்கு வந்தபின்பு காசாவில், இஸ்ரேல் நடத்திய தாக்குதலினால் இதுவரை 280 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நெடுநாளாய் நடைபெறுகின்ற போர் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.



ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் 97% ரேபிஸ் நோய்கள், நாய்களால் பரவுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 60,000 பேர் உயிரிழந்துள்ளனர். வெறி நாய்க்கடியிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 18 பேர் இறந்தனர், 34 பேரைக் காணவில்லை. நிலச்சரிவில் 10 முதல் 25 அடி ஆழத்தில் மக்கள் சிக்கி இறந்தனர். அவர்களது குடும்பங்கள் ஆறுதல் அடைய ஜெபிப்போம்.





கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, நைஜீரியாவில் 25 கிறிஸ்தவர்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர். நைஜீரியாவில் கிறிஸ்தவர்கள்மீதான துன்புறுத்தல்களும் கொலைகளும் நிறுத்தப்பட நாம் மன்றாடி ஜெபிப்போம்.

கடந்த 10 ஆண்டுகளில் டெல்லியில் சுமார் 1,841,84 லட்சம் குழந்தைகள் காணாமல் போனதாகவும், அதில் சுமார் 50,771 குழந்தைகளை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 12 முதல் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளே அதிகமாக மாயமாகின்றனர். மேலும் சிறுமிகள் அதிகம் காணாமல் போகின்றனர். 2025 ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான பத்து மாதங்களில் மட்டும் 14,828 குழந்தைகள் காணாமல் போனதாகப் புகார்கள் வந்துள்ளன. குழந்தைகள் மீட்கப்பட ஜெபிப்போம்.





இந்தியாவில் அதிக காற்று மாசினால் பாதிக்கப்பட நகரமாகப் புதுடெல்லி உள்ளது. இந்தியாவில் காற்று மாசு 50% தொழிற்சாலைகளினாலும், 27% வாகனங்களினாலும், 17% பமிர் எரிப்பதினாலும், 7% சமையல் எரிபொருளினாலும் ஏற்படுகிறது. இந்தியாவில் சுமார் 17 லட்சம் பேர் காற்று மாசினால் மரிக்கின்றனர். இந்தியாவில் காற்று மாசு ஏற்படாமல் பாதுகாக்கப்படவும், அதிகமாக மாசு வெளிப்படுத்தும் தொழிற்சாலைகளின் மீது அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.



8.2 பில்லியன் மக்கள்தொகை கொண்ட இவ்வுலகில், ஒவ்வொரு ஆண்டும் 1.35 மில்லியன் மக்கள் போக்குவரத்து விபத்துக்கள் மூலமாக இறக்கிறார்கள். இந்தச் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. சாலை போக்குவரத்து வாகன விபத்துகள் நடைபெறாமல் முற்றிலும் தடுக்கப்பட ஜெபிப்போம்.



2025ஆம் ஆண்டில், திபெத்தில் நடந்த நிலநடுக்கத்தில் 126 பேரும், மியான்மரில் 5,456 பேரும், ஆப்கானிஸ்தானில் 600க்கும் மேற்பட்டோரும், வங்காளதேசத்தில் 6பேரும், பிலிப்பைன்ஸில் 31 பேர் எனஆயிரக்கணக்கானோர் மரணமடைந்துள்ளனர். இந்த வருடம் இந்த இயற்கை அழிவுகள் வராதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபிப்போம்.

# பிற மாநில ஊழியங்கள்



2025ஆம் ஆண்டு தேவனுடைய கிருபையால் வட இந்தியாவின் **கல்கத்தா, பீஹார், புனே** மாநிலங்களில் வாலிபர்களுக்கென்று சிறப்பு கூடுகைகள் மற்றும் சுவிசேஷ ஊழியங்கள் நடத்தவும், சுமார் **2102** பேர் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தப்படவும் தங்களுடைய பகுதியில் தேவனுக்காக எழும்பிப் பிரகாசிக்கவும், செயல்படவும் அர்ப்பணித்துச் சென்றனர்.





தொடர்ந்து வட இந்திய பகுதிகளில் தேவன் அநேக வாலிபர்களை எழுப்பி, அவர்கள்மூலம் எழுப்புதல் அக்கினியை பரவச் செய்து கொண்டு வருகிறார்கள். கர்நாடக மாநிலம் பெங்களூரில் நடைபெற்ற வாலிபர் எழுப்புதல் கூடுகை மூலம் சுமார் 309 வாலிபர்களைச் சந்திக்க தேவன் கிருபை செய்தார்.

## ஆந்திரா மாநிலத்தில்

900 வாலிபர்களுக்கு வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்த தேவன் கிருபை பாராட்டினார்.

இக்கூடுகைகள் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்ட வாலிபர்கள் மாதாந்திர கூடுகைகளில் கலந்து கொண்டு தேவனுக்காக அவர்கள் பகுதிகளில் தீவிரமாக ஊழியம் செய்து வருகிறார்கள்.

தேவனுக்கே மகிமை!



# செய்திகள்!

## சிறார் குற்ற வழக்குகள்:



நாடு முழுவதும் உள்ள 302 சிறார் நீதி வாரியங்களில் 2023 அக்டோபர் 31 நிலவரப்படி ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட வழக்குகளில் 50% தீர்க்கப்படாமல் நிலுவையில் இருப்பதாக 'இந்திய நீதி அறிக்கை' என்கிற அமைப்பு வெளியிட்டிருக்கும் தகவல் அதிர்ச்சி அளிக்கிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டம்மூலம் 21 மாநிலங்களிடமிருந்து ஏறத்தாழ 250 மனுக்கள் வழியாக இந்தத் தரவுகள் பெறப்பட்டிருக்கின்றன. நீதித்துறையின் நான்கு தூண்களாக விளங்கும் காவல் துறை, சிறைத் துறை, நீதிமன்றங்கள், சட்ட சேவை ஆகியவை சிறார் நலன் சார்ந்து செயல்படுவதில் உள்ள போதாமையை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

18 வயதுக்கு உள்பட்ட சிறார், குற்றச் செயலில் ஈடுபடும்போது அவர்களை மற்றவர்களைப் போலச் சிறையில் அடைக்க முடியாது என்பதால் கூர்நோக்கு இல்லங்கள் அமைக்கப்பட்டன. 2012 நிர்பயா கூட்டுப் பாலியல் வல்லுறவு வழக்கில் குற்றவாளிகளில் ஒருவர் சிறார் என்பதால் அவர் கூர்நோக்கு இல்லத்துக்கு அனுப்பப்பட்டுப் பிறகு விடுவிக்கப்பட்டார். அதற்கு எதிர்ப்பு எழுந்ததால் சிறார் நீதி தொடர்பான சீர்திருத்தத்தை ஏற்படுத்தும் வகையில் சிறார் நீதிச் சட்டம் (குழந்தைகள் பராமரிப்பு -பாதுகாப்பு) 2015 உருவாக்கப்பட்டது. குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறாரை விசாரித்து வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில் 'சிறார் நீதி வாரியங்கள்' மாவட்டம்தோறும் அமைக்கப்பட வேண்டும் என அந்தச் சட்டம் பரிந்துரைத்தது. சட்டம் அமலாக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆன பிறகும் சிறார் பலர் நீதி கிடைக்காமல் அவதிப்பட்டுவருவது ஆய்வுக்குரியது.

இந்தியாவில் உள்ள 765 மாவட்டங்களில் 92% சிறார் நீதி வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளபோதும் நீதி வழங்குதலில் பாரபட்சம் நிலவுகிறது. ஒடிஷாவில் மிக அதிகமாக 83% வழக்குகளும் கர்நாடகத்தில் 35% வழக்குகளும் நிலுவையில் உள்ளன. நான்கில் ஒரு சிறார் நீதி வாரியத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை முழுமையாக இல்லை என்கிறது ஆய்வறிக்கை. 30% சிறார் நீதி வாரியங்களில் சட்ட உதவி வழங்கும் ஏற்பாடுகள் இல்லை. இதனால், ஒவ்வொரு சிறார் நீதி வாரியத்திலும் ஆண்டுதோறும் சராசரியாக 154 வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. தரவுகளை ஆவணப்படுத்துவதில் போதாமை, நிதிப்பற்றாக்குறை போன்றவையும் சிறாருக்கு நீதி கிடைப்பதை மேலும் சிக்கலாக்குகின்றன.

கொலை, பாலியல் வல்லுறவு போன்ற கொடுங்குற்றங்களில் ஈடுபடும் சிறார் 16 வயதைக் கடந்தவர்களாக இருந்தால், அவர்களை 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகக் கருதி தண்டனை அளிப்பதைச் சிறார் நீதி வாரியங்கள்தான் முடிவுசெய்ய முடியும். 2023 இந்தியக் குற்றத் தரவுகளின்படி இந்திய தண்டனைச் சட்டம், சிறப்பு உள்ளூர்ச் சட்டப் பிரிவுகளின் கீழ் 31,365 வழக்குகளில் 40,036 சிறார்மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் நால்வரில் மூவருக்கு மேற்பட்டோர் 16-18 வயதுக்கு உள்பட்டவர்கள். சிறார் நீதி வாரியத்தில் வழக்குகள் நிலுவையில் இருப்பதால், இவர்களைப் போன்றவர்களின் காத்திருப்பும் நீண்டதாக இருக்கிறது.

**நீதி வழங்கும் அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைவு இல்லாதிருப்பது, தரவுகளை ஆவணப்படுத்துவதில் மெத்தனம் போன்றவை சிறாருக்கான நீதியை மோசமாகப் பாதிக்கின்றன. இவை அனைத்தையும் உடனடியாகக் களைவதோடு சிறார் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் சமரசமற்ற வகையில் செயலாற்ற வேண்டியது மத்திய மாநில அரசுகளின் தலையாய கடமை.**

**- நவம்பர் 27, 2025 இந்து தமிழ் திசை.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

# Achievers 2026

பெங்களூரில்... கர்நாடகா மாநிலம்

**ஜனவரி 10** சனிக்கிழமை

மாலை: 4:00 - இரவு: 7:00

Place: **World Revival Prayer centre**
57/2, Thomasappa layout (opp ) Lumbini,
Garden Bus Stand Outer Ring Road,
Veerannapalaya (Nagavara),

தொடர்புக்கு: 9962085523 | 7899088538

KGFயில்...

**ஜனவரி 11** ஞாயிறு

மதியம்: 3:00 - மாலை: 5:00

Place: **World Revival Prayer centre**
1, Cornation Town,
Opp. to Sumathi Jain High School,
B.M. Road, Robertsonpet, K.G.F

தொடர்புக்கு: 9353710498



செய்தியும், ஜெபமும்:
**சகோ. அவினாஷ்**

சென்னை - மவுண்ட் ரோட்டில்...

**ஜனவரி 18** ஞாயிறு

மாலை: 4:00 - இரவு: 7:00

இடம் : ஆசீர்வாதமான சென்னை ஜெப மையம் பிரின்ஸ் குஷால் டவர்ஸ் மவுண்ட் ரோடு

தொடர்புக்கு: 94884 75315

திருப்பதியில்...

**ஜனவரி 24** சனிக்கிழமை

மாலை: 4:00 - இரவு: 7:00

World Revival Prayer Centre
D.No. 19-6-112/5, 3rd floor,
Celect Mobile building,
Opp. Unlimited show room
Hathiramji Colony, Tirupati

9488938305 | 79892 95442

கும்மிடிப்பூண்டியில்...

**ஜனவரி 25** ஞாயிறு

மதியம்: 3:00 - மாலை: 6:00

இடம்: SM திருமண மஹால்
18, ரெட்டம்பேடு சாலை கும்மிடிப்பூண்டி.

99415 22123 | 9488475315

சென்னை - தாம்பரத்தில்...

**ஜனவரி 11** ஞாயிறு

மாலை: 4:00 - இரவு: 7:00

இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம்,
73, வெங்கடேசன் தெரு,
மேற்கு தாம்பரம் - சென்னை

87544 53218 | 044-22264399

மைசூரில்...

**ஜனவரி 17** சனிக்கிழமை

மாலை: 4:00 - இரவு: 7:00

இடம்: World Revival Prayer Centre
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla, Mysuru

9962085523 | 9886311777



செய்தியும், ஜெபமும்:
**சகோ. காலேப்**



செய்தியும், ஜெபமும்:
**சகோதரி ஜிஷ்யா**

கோவில்பட்டியில்...

**ஜனவரி 18** ஞாயிறு

மதியம்: 2:30 - மாலை: 5:30

இடம் : செயிண்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி

தொடர்புக்கு:
9787322334 | 9677858766

தோல்வி பயமா! கலக்கமா!
படித்தது மறந்து போகிறதா?
உங்களுக்காகவே இந்தக் கூடுகை!

அனுமதி இலவசம்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 12 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

